**சாவகச்சேரி பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

-------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 24 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 27 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சாவகச்சேரி பிரதேசசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டுகளில் பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 57,562,303 கணக்குக்குக் கொண்டுவரப்படாமையால் திரண்டநிதி கணக்குகளில் குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 17,522,070 கணக்குக்குக் கொண்டுவரப்படாமையால் வருமானம் கணக்குகளில் குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) சபைக்குரித்தான 60 காணி கட்டடங்களின் பெறுமதிகள் கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

**1.3.2 பெறவேண்டியவை மற்றும் செலுத்தவேண்டியவை**

---

(அ) 1999 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 71,845 பெறுமதியான முற்பணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) செலுத்தப்பட வேண்டிய ரூபா 124,907 பெறுமதியான கொடுப்பனவுகள் உரிய திணைக்களத்திற்கு செலுத்தப்படாமல் வைப்புக் கணக்கில் உள்ளது.

**1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை**

---

ரூபா 73,561 பெறுமதியான சான்றுகள் இல்லாமையின் காரணமாக 01 கொடுக்கல் வாங்கலை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் 24 ஆம் பிரிவு | பிரதேச சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி நிர்வாக விதிகள் | |
| (i) அத்தியாயம் II விதி 66 | வருமான நிலுவை ரூபா 764,945 இனை அறவிட சபையின் செயலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) அத்தியாயம் III விதி 32 | சபையினால் ஆதனவரி மதிப்பீடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | ரூபா 130,598 பெறுமதியான காலம் கடந்த வைப்புக்களிள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 27,936,006 விளைந்திருப்பதுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 25,226,674 இருந்தமை நிதி விளைவு ரூபா 2,709,332 அதிகரித்துள்ளமைக்கு அரச மானிய அதிகரிப்பே காரணமாகும்.

### 2.2 தொழிற்படு மூலதனம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 48,570,097 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 44,036,653 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 4,533,444 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 வருமான முகாமைத்துவம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015 | | |
|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | ரூபா ‘000’ | ரூபா ‘000’ | ரூபா ‘000’ |
| இறைகளும் வரிகளும் | 110 | 31 | 646 |
| குத்தகை வாடகைகள் | 15,859 | 10,945 | 104 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,555 | 1,246 | 7 |
| ஏனைய வருமானங்கள் | 52,626 | 66,392 | 9 |
| | **70,150** | **78,614** | **766** |

### 2.3.2 வீதவரிகள்

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

(அ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணங்கள் ரூபா 518,500 சபைக்கு கிடைக்கவில்லை.

(ஆ) காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 73,545,330 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் கிடைக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

சபைக்கு சொந்தமான 3 சந்தைகள் பயன்படுத்தப்படாமலுள்ளது.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

உள்ளூராட்சி ஆணையாளரால் சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 67,536 குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாதுள்ளது.

### 3.3 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைக்குள் திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 197,672 தொடக்கம் ரூபா 5,563,340 வரையான வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

---

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

---

சபையினால் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

---

சபையின் பயன்பாட்டிலுள்ள உழவு இயந்திரம் 5 வருடங்களுக்கு மேலாக பயன்பாடற்ற நிலையில் உள்ளது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

அ. உள்ளகக் கணக்காய்வு

ஆ. காசு முகாமைத்துவம்

இ. களஞ்சியம்